# எட்டுத்தொகை அகநூல்களில் உயிரின ஓரெழுத்தொருமொழி

முனைவர்.கோ.சங்கரவீரபத்திரன்
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
வெ.ப.சு.தமிழியல் ஆய்வுமையம்
ம.தி.தா.இந்துக்கல்லூரி
திருநெல்வேலி - 627 010.
உலவி எண் 9940 77 1827
மின் அஞ்சல் balasan63@gmail.com

## 2.0.முன்னுரை

பாட்டும், தொகையும் அடங்கிய சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்களில் அமைந்த அகநூல்கள மட்டும் ஆய்வின் களமாகும். இவ் அகநூல்களில் புலவர்களால் கையாளப்பட்ட உயிரின ஓரெழுத்து ஒரு மொழியை மட்டும் இக்கட்டுரை விளக்கிச் செல்கிறது. எழுத்து ஏன்பது உயிர், உயிர் மெய் ஆகும்.

## 2.1. 0. உயிரின ஒரெழுத்து ஒருமொழி

### 2.1.1. ஆ

### 2.1.1.1. நற்றிணை

ஆ, தமிழ் மொழியின் நெடுங்கணக்கில் வரும் முதல் எழுத்து. இது உயர் முயற்சியால் பிறக்கும் எழுத்துகளுள் வாயைத் திறந்த அளவிலேயே ஒலிக்கும்.

#### 2.1.1.1.1. கிடங்கில் காவிதிப் பெருங்கொற்றனார்

இவர் முல்லைத் திணையில் பாடிய சொல்லிய பருவம் கழிந்தன்று எல்லையும் எனத் தொடங்கும் பாடலில் ஆ என்னும் ஒரெழுத்து ஒருமொழி பயின்று வந்துள்ளது. இவ்வெழுத்தின் பொருளாக பசு என்பதமைகிறது.

**உரும் இசை அறியாச் சிறு செந்நாவின்**
**ஈர் மணி இன் குரல் ஊர் நனி இயம்ப**
**பல் ஆ தந்த கல்லாக் காவலர்**[1]

இதன் பொருளாக

கார்கால மாலைப் பொழுதும் மழையும் தலைவன் வராததால் துன்பத்தை உண்டாக்கின. வாடைக்காற்றும் பனியும் தலைவியை வாட்டின. பருவம் முதிர்ந்ததால் கோவலர்கள் தங்கள் பசுக் கூட்டத்திற்கு புல்லாங்குழலை ஊதுகின்றனர், இவ்வோசை தலைவிக்கு மிகவும் வருத்தத்தைத் தந்ததால் இனி அவள் உயிர் வாழ்வது கடினம். தலைவன் வாராமை அவளை மேலும் துன்புறுத்துகிறது என்பதாகும்.

2.1.1.1.2. **அம்மூவனார்**

**யாரை எலுவ யாரே நீ எமக்கு** எனத் தொடங்கும் அம்மூவனாரின் நெய்தல் திணைப் பாடலில் இடம் பெற்ற ஆ என்ற ஓரெழுத்து ஒரு மொழி பசு என்னும் பொருளைத் தரும் விதத்தில் உள்ளது.

**ஆ புலம் புகுதரு பேர் இசை மாலைக்**
**கடல் கெழு மாந்தை அன்ன எம்**
**வேட்டனை அல்லையால் நலம் தந்து சென்மே**[2]

மகளிர் சூடிக் கழித்த பல மலர்களைப் பொருந்த அடைந்து முதிர்ந்த பசு உண்ணும். உண்ட பின் அப்பசு மீண்டும் தான் இருக்கும் புலத்துள் புகும். பெரிய ஆரவாரம் மிக்கதுமான மாலைப்பொழுது எனக் கூறுமிடத்து ஆ என்னும் ஓரெழுத்து ஒரு மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது.

2.1.1.2.**குறுந்தொகை**

குறுந்தொகையில் ஆ என்ற ஓரெழுத்து ஒரு மொழி பசு என்ற பொருளில் 64,104,,210,260 ஆகிய பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

2.1.1.2.1. **கருவூர்க் கதப்பிள்ளை**

இவர்தம் பாடலில்

**பல் ஆ நெடுநெறிக்கு அகன்று வந்தென**
**புன்தலை மன்றம் நோக்கி மாலை**[3]

என்ற வரிகளில் ஆ இடம் பெற்றுள்ளது.

2.1.1.2.2. **காவன் முல்லைப் பூதனார்**

இவரின் பாடலில்

**தாளித் தண்பவர் நாள் ஆ மேயும்**
**பனிபடு நாளே பிரிந்தனர்**[4]

என்ற அடிகளில் ஆ என்ற ஓரெழுத்து ஒரு மொழி பசு என்ற பொருளில் இடம் பெற்றுள்ளது.

2.1.1.2.3. **காக்கைப்பாடினியார்**

**பல் ஆ பயந்த நெய்யின் தொண்டி**
**முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு**[5]

என்ற வரிகளில் காக்கைப் பாடினியார் பசு என்னும் ஆ என்ற ஓரெழுத்து ஒரு மொழி பசு என்ற பொருளில் இடம் பெறுமாறு அமைத்துள்ளார்.

2.1.1.2.4. **கல்லாடனார்**

இவரின்

**கன்று இல் ஓர் ஆ விலங்கிய**
**புண்ணால் ஓமிய கரன் இறந்தோரே**[6]

என்ற வரிகளில் பசு என்னும் ஆ என்ற ஓரெழுத்து ஒரு மொழி பசு என்ற பொருளில் இடம் பெற்றுள்ளது.

### 2.1.1.3.கலித்தொகை

#### 2.1.1..3.1. சோழன் நல்லுருத்திரன்

இவர் பாடிய முல்லைக் கலியில் பசு என்னும் பொருளில் ஆ என்னும் ஓரெழுத்துஒரு மொழி இடம் பெற்றுள்ளது. அவ்வரிகள்

**ஆ முனியா ஏறு போல் வைகல் பதின்மரைக்**
**காமுற்றுச் செல்வாய் ஒர கட்குத்திக் கள்வனை**[7]

ஆகும்.

இதன் பொருளாக
'நீதான் பல பசுக்களையும் தெவிட்டாமற் கூடும் ஏறுபோல் நாள்தொறும் பதின்மரைக் காமுற்றுச் செல்வாய்' என்பதமைகிறது.

### 2.1.1.4.அகநானூறு

2.1.1.4.1. கயமனாரின்
பாலைத் திணைப் பாடலில் பொருளில் ஆ என்னும் ஓரெழுத்து ஒரு மொழி இடம்பெற்றுள்ளது. இச்சொல்லும் பசு என்னும் பொருளையேத் தருகிறது.

அவ்வரிகள்

**அத்த கள்வர் ஆ தொழு அறுத்தென**
**பிற்பாடு பூசலின் வழிவழி ஓடி**[8]
என்பதாகும்.
இதன் பொருளாக

ஆறலைக் கள்வர்கள் பசுக்களைக் கவர்ந்து செல்லும் நிலையில் அவர்கள் பின் சென்று செய்யும் சண்டையினைப் போல் நானும் பூசல் கொண்டு பின் ஓடியும் அவள் உருவத்தைக் காணமுடியவில்லை என்று சொல்லி செவிலி புலம்புமாறு அமைந்துள்ளது.

2.1.1.4.2. **நொச்சிநியமங்கிழார்**

குறிஞ்சித் திணையில் பாடிய பாடலில் இடம் பெற்ற ஆ
என்னும் ஓரெழுத்து ஒரு மொழி பசு என்னும் பொருளில் இடம்பெற்றுள்ளது.

**ஏகல் அடுக்கத்து இருள் அளைச் சிலம்பின்**
**ஆ கொள் வயப்புலி ஆகும் அது**[9]

பாறை அடுக்குகள் கொண்ட இருண்ட குகையினையுடைய பக்க மலையில் பசுவினைக் கவர்ந்து செல்லும் வலிமை பொருந்திய புலி வந்ததால் எழுந்த ஒலியாகும். என்றபொருளில் மேற்கண்ட வரிகள் இடம் பெறுகின்றன.

2.1.1.4.3. **ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்**

இவர் பாடிய முல்லைத் திணைப் பாடலில் பசு என்னும் பொருளிலேயே ஆ என்னும் ஓரெழுத்து ஒரு மொழி பயின்று வந்துள்ளது.
அவ்வரிகள்

**கன்று பயிர் குரலை மன்று நிறை புகுதரும்**
**ஆ பூண் தெண்மணி ஐது இயல்பு இன்னிசை**[10]

என்பதாகும்.

கன்றின் குரலைக் கேட்டு மந்தையிலிருந்து திரும்பும் பசுக்களின் கழுத்தில் உள்ள மணி அழகாக விட்டு விட்டு ஒலிக்கும். என்பது அப்பாடல் வரிகளின் பொருளாகிறது.

2.1.2. **ஏ**

2.1.2.1. **நற்றிணை**

ஏ, தமிழ்மொழியின் நெடுங்கணக்கில் எட்டாம் எழுத்து. இவ்வெழுத்து உயிர் முயற்சியால் பிறக்கும் எழுத்துகளுக்குள் வாயத் திறத்தலோடு அடி நாவின் விளிம்பு அண்பல்லினை உறப்பிப்பதும்
அகர இகரக் கூறுகள் சந்தித்துப் பிறப்பதுமான ஒரு நெட்டுயிர் ஆகும்.

**2.1.2.1.1. சிறுமோலிகனார்**

**கேளாய் எல்ல தோழி! அல்கல்**
**வேணவா நலிய வெய்ய உயிரா**
**ஏ மான் பிணையின் வருந்தினன் ஆக**[11]

என்ற குறிஞ்சித் திணைப் பாடலில் சிறுமோலிகனார் ஏ என்ற ஒரெழுத்து ஒரு மொழியை அம்பு என்ற பொருளில் பயன்படுத்தி உள்ளதை அறிய முடிகிறது.

தோழியே! இதனைக் கேட்பாயாக! நேற்றிரவு வேட்கை மிகுதியால் ஏற்பட்ட ஆசை என்னைத் துன்புறுத்தியதால் வெப்பமாய் பெருமூச்சு விட்டு அம்புபட்ட பெண்மான் போல் வருத்தமுற்றேன் எனப் பலவாறு மன அமைதி இழந்த தன்மையை புலப்படுத்தும் வண்ணம் இப்பாடல் அமைகிறது.

2.1.2.2 **குறுந்தொகை**

2.1.2.2.1. **மள்ளனார்**

ஏ என்னும் ஏ என்ற ஒரெழுத்து ஒரு மொழியை அம்பு என்ற பொருளில் மள்ளனார் பயன்படுத்தி உள்ளதை அறிய முடிகிறது.
அவ்வரிகள்

**பூ ஒத்து தகைய ஏ ஒத்து**
**எல்லாரும் அறிய நோய் செய்தனவே**[12]
என்பதாகும்.

2.1.3.**ஐ**

2.1.3.1.**குறுந்தொகை**

2.1.3.1.1.**பரணர்**

ஐ என்னும் ஒரெழுத்து ஒரு மொழி தலைவன் என்ற பொருளில்

**கருங்கால் வேம்பின் ஒண் பூ யாணர்**
**என் ஐ இன்றியும் கழிவது கொல்லோ?**[13]

என்று பரணரின் பாடலிலும்

2.1.3.1.2. **வெள்ளி வீதியார்**

**நல் ஆன் தீம்பால் நிலத்து உக்காங்கு**
**எனக்கும் ஆகாது, என் ஐக்கும் உதவாது**[14]

என்ற வெள்ளி வீதியாரின் பாடலிலும் இடம் பெற்றுள்ளது.

2.1.3.1.3. **கழார்க் கீரண் எயிற்றி**

கழார்க் கீரண் எயிற்றியின் பாடலில் ஐ என்னும் ஒரெழுத்து ஒரு மொழி ஒலிக் குறிப்புச் சொல்லாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

**நள் என் யாமத்து ஐ எனக் கரையும்**[15]

என எருமை சேற்றிலிருந்து வெளியே வரத் தன் இனத்தை அழைக்கும் என்கிறார்.

2.1.3.2. **கலித்தொகை**
2.1.3.2.1.**கபிலர்**

இவ்ரின் கலித்தொகைப் பாடலில் இடம் பெற்ற ஐ என்னும் ஓரெழுத்து ஒரு மொழி வியப்பு என்னும் பொருளில் இடம்பெற்றுள்ளது.

தலைவியின் அழகினைக் கூறுமிடத்து உன் நெற்றி கண்டவர்கள் வியந்து போகுமாறு தேய்ந்தது.ஆயினும் பிறையும் அல்ல. உன் முகம் மருவற்றுள்ளது ஆயினும் நிலவும் அல்ல என்ற கருத்தமைய

**ஐ தேய்ந்தன்று பிறையும் அன்று**
**மை தீர்ந்தன்று மதியும் அன்று**[16]

என்ற வரிகள் உள்ளன.

## தொகுப்புரை

1.சுருங்கச் சொல்லி விளங்க வைக்க ஓரெழுத்து ஒரு மொழி பயன்பட்டுள்ளது.

2.பெரும்பாலான சங்க இலக்கிய ஓரெழுத்து ஒரு மொழி இன்று வழக்கில் இல்லை.

3.செய்யுளில் சொற் சிக்கனம் கருதி ஓரெழுத்து ஒரு மொழி பயன்பாட்டில் இருந்துள்ளது.

4.ஆ என்னும் ஓரெழுத்து ஒரு மொழி நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, கலித்தொகையில் மட்டும் இடம் பெற்றுள்ளது.

5. ஆ என்னும் ஓரெழுத்து ஒரு மொழி பசு என்ற ஒரு பொருளையேத் தருமாறு காக்கைப்பாடினியார் என்ற ஒரு பெண்பாற்புலவரும் கையாண்டுள்ளார். தற்காலத்தில் ஆ என்னும் ஓரெழுத்து ஒரு மொழி வியப்பு, அச்சம், இகழ்ச்சி, உணர்ச்சி போன்ற பொருளைத் தருமாறு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

6. ஏ என்னும் ஓரெழுத்து ஒரு மொழி அம்பு என்ற ஒரு பொருளினைத் தருமாறு புலவர்களால் கையாளப்பட்டுள்ளது.

7.ஐ என்னும் ஓரெழுத்து ஒரு மொழி தலைவன் என்ற பொருளில் பரணரும், வெள்ளிவீதியாரும் குறுந்தொகையில் அமைக்க கபிலர் வியப்பு என்ற நிலையில் கலித்தொகையில் கையாண்டுள்ளார்.

8..ஐங்குறு நூற்றில் உயிரின ஓரெழுத்து ஒரு மொழி இடம்பெறவில்லை.

## குறிப்புகள்

1. நற். 364 ; 7-9.

2. மேலது 395 ; 8-10

3.. குறு. 64 ; 1-2.

4. மேலது 104 ; 3 -5.

5. மேலது 210 ; 2 -3.

6. மேலது 260 ; 7 -8.

7. கலி. 108 ; 48 – 49

8. அகம் 7 ; 15 – 16.

9. .மேலது 52 5 -6.

10. மேலது 64 ; 14 -15.

11. நற். 54 ; 1-4.

12.. குறு. 72; 1 – 2.

13.மேலது 24 ; 1-2

14.மேலது 27 ; 3-4.

15.மேலது 261 ; 4 -5.

16. கலி . 55 ; 9 -10.